மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. பாப்பா சுந்தரம்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு மூலமாக குவாரி என்ற முறையிலே ஏலம் எடுத்து அரைங் கல், ஜல்லி உடைக்கிறேன் என்று மலிவாக ஏலம் எடுத்து, அதிலே நல்ல கிரானைட் உற்பத்தி பண்ணி தனியாக அவர்கள் வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடை செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே குவாரி லைசன்ஸ் வேண்டும் என்று சொன்னால், முதலிலே நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல், கருங்கல் குவாரி என்று முதலிலே சில பேர் அனுமதி வாங்கி விடுகிறார்கள், அப்படி அனுமதி கொடுக்கப்பட்ட பிறகு அதிலே கிரானைட் கற்கள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டால் அரசு அதைத் தடை செய்து கொண்டிருக்கிறபோது, அவர்கள் உயர்நீதிமன்றம் சென்று தடை வாங்கி, இப்படி சட்டவிரோதமாக கற்களை எடுத்து வருவது சில இடங்களிலே இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதற்கு அரசு இப்போழுது புதிய முறையை கையாண்டு கற் குவாரிகளின் அனுமதி கேட்கின்றபோது, கிரானைட் அதிலே இருக்கிறதா என்பதை கண்டறிவதற்கு தமிழ்நாடு கனிம நிறுவனம் அதாவது TAMIN என்று சொல்லப்படுகிற அந்த நிறுவனத்தினுடைய 'நோ அப்ஜக்ஷன் சர்ட்டிபிக்கேட்', தடையில்லா சர்ட்டிபிக்கேட், வழங்கப்பட்ட பிறகு தான், அப்படிப்பட்ட அனுமதிகள் இப்பொழுது வழங்கிக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது உயர்நீதிமன்றத்தினுடைய ஆணையின் மூலம் சட்டவிரோதமாக அப்படிப்பட்ட கற்களை எடுத்தவர்கள் மீது அரசு, அந்த வழக்கை விரைவாக முடித்து மீண்டும் அந்தக் குவாரியை அரசே எடுப்பதற்கு உரிய தீவிர நடவடிக்கையை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 152, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

152—

கிரிப்பாறை ரப்பர் தொழிற்சாலையை மேட்டுப் பகுதிக்கு மாற்றுதல்.

*17474—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 மார்ச் 30]

(அ) கிரிப்பாறை ரப்பர் தொழிற்சாலை தாழ்வான பகுதியில் இருப்பதால், மேட்டுப் பகுதியில் தொழிற்கூடத்தை மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளில் புயல் மற்றும் பெருமழையினால் கன்னியாகுமரி மாவட்டம் அதுவும் குறிப்பாக குமரி சட்டமன்றத் தொகுதியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. அந்த நேரத்தில் என் தொகுதியிலுள்ள கிரிப்பாறை ரப்பர் தொழிற்சாலை முழுவதும் தண்ணீரால் சூழப்பட்டு மிகுந்த பொருட் சேதம் ஏற்பட்டது' அதற்குக் காரணம் அருகில் ஓடும் ஆற்றைவிட தாழ்வான பகுதியில் அந்தத் தொழிற்சாலை அமைந்திருப்பது தான் அதேபோல், அந்தத் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் குடியிருக்கும் வீடுகளும், அந்த மழையில் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியுள்ளன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிற்சாலையையும், தொழிலாளர்கள் குடியிருப்புகளையும் மேடானப் பகுதியில் மாற்ற முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் குடியிருப்பு குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியில் வினா எழுப்பவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போன்று இந்த ரப்பர் தொழிற்கூடம் ஆற்றினுடைய தாழ்ந்த பகுதியில் இல்லை. மாறாக தொழிற்கூடத்தைச் சுற்றி, மாகபதி, சித்தாறு, பாம்பாறு போன்ற ஆறுகள் இருக்கின்றன. சென்ற முறை அல்லது 1992-ஆம் ஆண்டு ஏற்பட்ட மழை என்பது, பெரும் வெள்ளம் என்பது, தமிழகத்தில் 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்ட ஒன்று. எனவே, எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட பாதிப்பிற்கு நம்முடைய அரசாங்கம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பல்வேறு பணிகளைச் செய்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் கிரிப்பாறை தொழிற்கூடத்திற்குச் செல்ல, ஒரு பாதையைச் செப்பனிடுவதற்காக

[1994 மார்ச் 30

ரூ. 6.90 இலட்சம் செலவில் கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அத்துடன், அந்தத் தொழிற் சாலையைச் சுற்றி இருக்கிற பக்கங்களில் சுற்றுச்சுவர் கட்டுவதற்காக 3.68 இலட்சம் ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கீடு செய்து பணிகள் இப்பொழுது செம்மையாக நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு இப்படிப்பட்ட பணிகள் நடப்பதன் மூலமாக மேற்கொண்டு மழை வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்ட வனத் துறைக்குச் சொந்தமான 90 ஏக்கர் நிலம் சம்பந்தமான வழக்கு உச்சநீதிமன்றம் வரை சென்று இன்று வனத் துறைக்குச் சொந்தமாக்கப்பட்டுள்ளது. அந்த இடம் மேடான பகுதியில் அமைந்துள்ளது. அந்தத் தொழிற்சாலையில் வேலைபார்க்கும் தொழிலாளர் களுக்காக அந்த கிரிப்பாறையில் அமைந்துள்ள அந்தத் தொழிற்சாலையையும், தொழிலாளர் குடியிருப்புகளையும் அந்த இடத்திற்கு மாற்றித் தந்தால் சிறந்ததாக இருக்கும் என்று விரும்புகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று தொழிலாளர்களுடைய பிரச்சினையை மாண்புமிகு உறுப் பினர்கள் தன்னுடைய கேள்வியில் தெரிவிக்கவில்லை. எனவே அதுகுறித்து ஆராய்வதற்கு எந்தவிதத் தடையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்தத் தொழிற்சாலையை மாற்றியமைப்பதாக இருந்தால் சுமார் 2.50 கோடி ரூபாய் செலவாகும் என்று கருதப்படுகிறது. ஏற்கெனவே இந்தத் தொழிற்சாலை ஒன்றரைக் கோடி ரூபாய் நட்டத்தில் இயங்கி வருகிறது. எனவே அங்கே இருக்கிற தொழிலாளர்களுடைய நல்வாழ்வை உயர்த் துவது, அவர்களுடைய சமூகப் பொருளாதார உயர்வை மேம்படுத்துவது என்பதற்காக இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு போனஸ் மற்றும் கருணைத் தொகையினுடைய அடிப்படையில் சுமார் 45 இலட்சம் ரூபாய் வழங்கி இருக்கிறார்கள். 10 ஆண்டு காலமாக தொழிற்சங்க நடவடிக்கைகளின் மூலமாக இந்தத் தொழிற்

1994 மார்ச் 30]

சாலை ஊழியர்களுக்கு கிடைக்காத உதவிகளை இந்த ஆண்டு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் செய்த தோடு மட்டுமல்ல ; 1988-க்குப் பிறகு இந்த ஆண்டுதான் அந்தப் பகுதியில் வாழ்கிற தொழிலாளர்களுக்குத் தேவை யான பெட்சீட், குடைகள் வழங்குவதற்கு மூன்று இலட்சத்து முப்பத்தேழாயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களின் வாழ்வை உயர்த்துவது என்பதும், அந்தத் தொழிற்சாலையை இலாப நோக்கோடு செயல்படுத்துவது என்பதும் அரசி னுடைய தலையாய கடமையாகக் கொண்டு செயல்படுத்தப் பட்டுவருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 153— திரு ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சிங்கை கோவிந்தராசு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

153—

தமிழக அரசுத் திரைப்படப் பிரிவின் செய்திச்சுருள்களை திரையரங்குகளில் திரையிட நடவடிக்கை எடுத்தல்.

? 10024—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் திட்ட விளக்கங்களை தமிழக அரசு திரைப்படச் செய்திப் பிரிவு தொகுத்து வழங்கும் "செய்திச்சுருள்" சென்னையிலுள்ள திரையரங்குகளில் காட்டப்பட்டு வந்தது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசின் செயல் திட்டங்களைத் தொகுத்து "செய்திச்சுருளாக" திரையரங்குகளில் மீண்டும் காண்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்திமற்றும் விளம்பர துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே